IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பழந்தமிழரின் பண்பாட்டுக் கலைகள்

முனைவர் ப.பிரியா
உதவிப் பேராசிரியை
தமிழ்த்துறை
கம்பன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவண்ணாமலை - 606 603

**முன்னுரை:**

உலகில் உள்ள கலைகளுக்கெல்லாம் தமிழர்தம் கலைகளே முன்னோடிகளாக விளங்குகின்றன. ஒரு சமுதாயத்தில் கலைகள் சிறப்புற்று விளங்குகின்றது எனில் அந்தக் கலைகளுக்குரிய சமுகாய மக்கள் மிக சிறப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கூத்துக் கலை, இலக்கியக்கலை, நாடகக்கலை முதலிய அழகுக்கலைகள் அக்காலத் தமிழர் வளர்த்த கலைகளுள் சிலவாகும். தமிழ்ச் சமூகத்தினாலே மறக்கப்பட்டு மறைந்து கொண்டிருக்கிற அழகுக் கலைகளைப் பற்றி இக்காலத்தவருக்கு அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

**அழகுக் கலைகள் :**

அழகுக்கலைகள் என்பது கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை நாடக்ககலை என்பனவாகும்.

**கட்டடக் கலை :**

அழகுக் கலைகளில் முதலாவதாக கருதப்பெறுவது கட்டடக் கலையேயாகும் வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் முதலியவை கட்டடங்களாக இருந்தாலும் கோவில்களே கட்டடக்கலையில் முதலிடம் பெறுகின்றன. கோவில்கள் முதலில் மரத்தினால் கட்டப்பெற்றன. மரக்கட்டடங்கள் வெயிலினாலும் மழையினாலும் தாக்குண்டு விரைவில் பழுதுபட்டு அழிந்துவிடும் தன்மையுடையது. அவை

பழுதுபடாமல் இருப்பதற்காக இவற்றின் மேல் செப்புத் தகடுகள் வேய்வது பண்டையக்கால வழக்கமாகும்.

சிதம்பரம் கோவில்களின் கூரைகளில் சில அரசர்கள் செம்புத் தகடுகளையும் பொற்தகடுளையும் வேய்ந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

மரக் கட்டடங்கள் விரைவில் பழுதடைவதோடு எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும், ஆகவே பிற்காலத்தில் செங்கல்லினாலும், சுண்ணாம்பினாலும் கோவில்களை கட்டினர். இவை சில நூற்றாண்டுகள் தாம் நீடித்திருக்க கூடியனவாக இருந்தன. இவ்வாறு செங்கல்லினால் சோழன் செங்கணான் எழுபத்தெட்டுப் பெருங்கோவில்களைக் கட்டினான்.

**குகைக் கோவில்கள் :**

மகேந்திரவர்மன் கோவில் கட்டட அமைப்பில் புதிய முறைகளை கடைப்பிடித்தான் பெரிய கற்பாறையை செதுக்கித் தூண்களையும் முன் மண்டபத்தையும் அதற்குள் கருவறையும் அமைத்து குகைக்கோவில் உண்டாக்கினான்.

இவ்வகையில் அமைந்த கோவில்கள் பலவற்றுள் ஒன்று விழுப்புரம் தொடர்வண்டி நிலையத்துக்கு அருகில் மண்டகப்பட்டு என்னும் ஊரில் உள்ளது.

**கற்றளிகள்** :

கி.பி ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மன் ஆன இராசசிம்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் முறையே கற்றளி எனப்படுவதாகும். இம்முறையில் கட்டடக்கலை மாமல்லபுரத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள கோவில்: காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோவில் என்று இப்போது வழங்கப்படும் இராசசிம்மசரம் கோவில்: பனமலை என்னும் ஊரில் உள்ள கோவில் முதலியவை கற்றளிகளாகும். இவற்றுள் பனமலையில் உள்ளகோவில் தான் முதன் முதலாகக் கட்டப் பெற்ற கற்றளியாகும்.

**மாடக்கோவில்** :

மாடக் கோவில்கள் என்றால் மாடிபோல் அமைந்த கோவில் என்பது பொருள். ஒன்றன் மேல் ஒன்றாக ஒன்பது நிலைகளை கொண்ட மாடக்கோவில்கள் கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர்தாம் மாடக் கோவில்கள் காணப்பெற்றன. அவை செங்கற்களினால் அமைக்கப் பெற்றவை அதனால் தான் அவை அழிந்துவிட்டன.

இந்த மாடக் கோவில்களை சோழன் செங்கணான் கட்டியதாக ஆழ்வாரும் நாயன்மாரும் கூறியுள்ளதனால் கி.பி.ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னமேயே கட்டப் பெற்றவை என்பனவும் செங்கற்களினால் கட்டப் பெற்றவை என்பனவும் தெளிவாகின்றன.

**பரிவார ஆலயங்கள் :**

கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, சோழா் காலத்தில் சிவன் கோவில்களில் அம்மனுக்கென்று தனிக் கோவில்கள் அமைப்பதனையே பரிவார ஆலயங்கள் என்று வழங்குகின்றனா். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயம் இதனை போன்ற ஓா் ஆலயமாகும்.

**வைணவக் கோவில்** :

பெருமாள் கோவில்களிலும் கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பு **"தாயாா் சந்நிதி"** இருந்ததில்லை. சைவா் அம்மனுக்குத் தனி ஆலயம் அமைத்ததனைப் போல் வைணவரும் திருமகளுக்குதனி ஆலயமாகத் தாயாா் சந்நிதி என்று தனியாக அமைத்துக் கொண்டனா்.

**சிற்பக்கலை :**

சிற்பக்கலை. கட்டடக் கலைக்கு அடுத்தப்படியாக வைத்து போற்றப்படுகிறது.

**இருவகைச் சிற்பங்கள் :**

சிற்பக்கலை கண்ணையுங் கவா்ந்து மனத்துக்கு இன்பங் கொடுக்கின்ற இனிய கலையாகும். சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைப்புச் சிற்பம் என்றும் இரண்டு விதமாக பிரிக்கலாம். முழு உருவ சிற்பம் என்பது பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது. புடைப்புச் சிற்பம் என்பது பொருள்களின் ஒருபுறம் மட்டும் தெரியும் படிசுவா்களிலும் பலவகைகளிலும் அமைக்கபடுவதேயாகும்.

**தத்ருப உருவங்கள் :**

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை பாரத நாட்டு சிற்பகலையை போலவே சமயத்தை அடிப்படையாக கொண்டு வளா்ச்சி பெற்றிருக்கின்றது. ஆகவே தெய்வ உருவங்கள் நமது நாட்டு சிற்பகலையில் பெரிதும் முதன்மை பெற்றுள்ளன. கிரேக்க தேசம் உரோமாபுரி முதலிய மேல்நாடுகளிலே மனிதத் தத்ருபச்சிற்பங்கள் சிறப்பாக வளா்ச்சி

பெற்றதனைப் போலவே நமது நாட்டிலும் மனிதத் தத்ருபச் சிற்பக்கலை முழுவளர்ச்சி அடையவில்லை.

**கல்லும் உலோகமும்** :

நமது நாட்டுச் சிற்பக் கலை சமயத்தை அடிப்படையாக கொண்டு வளர்ச்சி பெற்றது சைவ, வைணவ உருவச் சிற்பங்களை ஆதிகாலத்தில் மரத்தினாலும் சுதையினாலும் பஞ்சலோகங்களினாலும் செய்து அமைத்தார்கள்.

ஓவியக் கலை சங்க காலத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓவியக்கலை நமது நாட்டிலே வளர்ச்சி அடைந்திருந்தது. காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்த உவவனம் என்ற பூங்சோலையின் இயற்கை காட்சி ஓவியம் ஒருவன் துணிச்சீலையில் அழகாக எழுதிய சித்திரப்படம் போல் இருந்தது என்று மணிமேகலை காவியத்தில் சீத்தலைச்சாத்தனார் கூறுகிறார்.

**“வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினை**

**சித்திரச் செய்கைப் படாம் போர்த் ததுவே**

**யொப்பத் தோன்றிய உவவனம்”**

என்று மணிமேகலை கூறுகிறது. சுவர் ஓவியமும் சிறந்திருந்தது அக்காலத்தில்

**“கயங்கண்டவயங்கு டைநகரத்துச்**

**செம்பியன்று அன்னசெஞ்சுவர் புனைந்து”**

ஏன்று புறநானூற்றில் மாங்குடி மருதனார் பாடியுள்ளார்.

**இசைக்கலை:**

இசைக்கலை காதினால் கேட்டு இன்புறத் தக்க இன்கலையே இசைக்கலை பரிபாடல் சங்க காலத்திலேயே இசைக்கலை சிறப்புற்றிருந்தது என்பதற்கு பரிபாடல் நூலே தக்க சான்றாகும். இப்பொழுது ஒருவர் பாடலை இயற்ற, இதற்கு வேறு ஒருவர் இசையை அமைக்க, வேறு ஒருவர் பாட, இதற்கு ஒருவர் வாயசைக்க என்னும் முறையை போன்று பரிபாடலில் ஒருவர் பாடலை இயற்றியுள்ளார். அந்த பாடலுக்கு வேறு ஒருவர் இசை அமைத்துள்ளார்.

**மறைந்த இசை நூல்கள்** :

பஞ்சபாரதீயம் இசைநுணுக்கம், வாய்ப்பியம், இந்தகிரகாளியம், குலோத்துங்கன் இசை நூல், இசைத்துறைச் செய்யுள், துறைக் கோவை, இசைகலைச் சாசனம் முதலிய பல்வேறு இசை நுட்ப நூல்கள் நமக்குக் கிடைக்காமற் போயின.

**தமிழிசை ஏழு** :

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன தமிழிசையாகும்.

**இசைக்கருவிகள்** :

தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக்கருவி முதலில் எழுந்த தமிழர் தம் இசைக்கருவி. குழலும் யாழும் முழவுமாகும். இந்த மூன்று இசைக் கருவிகளின் பெயரில் தமிழுக்கே சிறப்பு வாய்ந்த ழகரத்தில் அமைந்துள்ளதிலிருந்தே இந்த இசையும் இசைக் கருவிகளும் தமிழர்க்கே உரிமையாமனவை எனக் கூறலாம்.

**கூத்ததுக்கலை** :

கூத்துக்கலை தமிழர்தம் பழங்காலக் கலையாகும். கூத்தே நாடகம் ஆகித் திரையுமாகியுள்ளது. இசைக்கலையுடன் தொடர்புடையது கூத்துக் கலையாகிய ஆடற்கலை. இசைக்கலையை போன்று மிகப் பழைமை வாய்ந்தது ஆடற்கலை.

**இலக்கியகலை** :

நுண் கலைகளுள் தலை சிறந்தது இலக்கியக்கலை. இலக்கியகலை ஏனைய கலைகளை போன்று கண்ணால் கண்டும் காதால் கேட்டும் இன்புறத் தக்கதன்று அறிவினால் உணர்ந்து இன்புறத் தக்கது.

**நாடக்கலை** :

இலக்கியக் கலையுடன் தொடர்புடைய கலை நாடகக் கலையாகும். நாடகம் என்பது ஒருவன் செய்ததனை ஒருவன் உள் வாங்கிக் கொண்டு பின்னர் அதனைச் செய்து காட்டுவது இதனால் நாடகம் எனப் பெயர் பெற்றது. அதாவது நடித்தல் என்று பெயர் பெற்றது. நாடகத்திற்கு இன்றியமையாதவை எண்வகை மெய்ப்பாடுகள் ஆகும்.

**முடிவுரை:**

மிகப்பழைய காலந்தொட்டு நாகரிகம் பெற்று வாழ்ந்து வருகிற தமிழரும் தமக்கென்று அழகுக் கலைகளை உண்டாக்கிப் போற்றி வளர்த்து வருகிறார்கள். இரண்டாயிரத்து

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்ந்து வருகிற தமிழரின் அழகுக் கலைகள் மிகமிக பழமையானவை. தமிழ்ச் சமூகத்தினாலே மறக்கப்பட்டு மறைந்து கொண்டிருக்கிற அழகுக் கலைகளை இக்காலத்தவரும் போற்றி பாதுகாக்க வேண்டும்.

பார்வை நூல்கள் :
தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள்
முனைவர் ப இப்ராஹிம்
நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்
அம்பத்தூர் சென்னை - 600050
பதிப்பு– 2024

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
மயிலைசீனி. வேங்கடசாமி
நாம் தமிழர் பதிப்பகம்
சென்னை - 05
முதல் பதிப்பு 2003